**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.5/2025**
Prosecution: **PW4**

Deposition of the witness of **LW6**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ஜெகதீஷ் | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.ஆதிமூலம் | Occupation | வாகன ஓட்டுநர் |
| Village /Area | விளாபாக்கம் | Age | 23 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 6243 6580 8711 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **08.01.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் ஆற்காடு தாலுக்காவிலுள்ள விளாபாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வாகன ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட சுதாகர், அஜித்குமார் மற்றும் அண்ணாமலை ஆகிய மூவரையும் எனக்கு தெரியும். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு எங்கள் ஊரில் இரு தரப்பினர்களுக்கு இடையில் சண்டை நடந்ததாகவும், அதில் அவர்களில் சிலருக்கு காயம் ஏற்பட்டதாகவும் நான் கேள்விப்பட்டேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் நான் ஊரில் இல்லை. அந்த சமயத்தில் சென்னையில் இருந்தேன். இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. வழக்கு சம்பவம் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவத்திற்கு மறுநாள் திமிரி காவல் நிலைய போலிசார் என்னுடைய பெயர் மற்றும் முகவரியை மட்டும் கேட்டு எழுதிக்கொண்டார்கள்.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அவரை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு, சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

திமிரி காவல் நிலைய ஆய்வாளர் என்னை 29.10.2022-ம் தேதி விசாரித்த போது நானும், எங்கள் ஊரை சேர்ந்த சுதாகர், ராகுல், வினோத், ஜெய்கணேஷ், அஜித் ஆகியோர் நண்பர்கள் என்றும், 24.10.2022-ம் தேதி இரவு 11.00 மணிக்கு தீபாவளி அன்று நானும், என் நண்பர்களும் எங்கள் ஊரிலுள்ள பெருமாள் கோவில் எதிரில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த போது எங்கள் ஊரை சேர்ந்த யுவராஜ், கோகுல் மற்றும் அவரது நண்பர்களுடன் வந்து கிருஷ்ண ஜெயந்தி கணக்கை ஏன்டா எங்க கிட்ட காட்டவில்லை என்று வாய் தகராறு செய்து சண்டைக்கு இழுத்ததாகவும், அதற்கு நாங்கள் வீண் சண்டை செய்கிறார்கள் என்று வீட்டிற்கு போகலாம் என்று அங்கிருந்து கொஞ்சம் தூரம் சென்று கொண்டிருந்த போது நில்லுங்கடா பொட்ட பையனுங்களா பயந்து போறீங்களா என்று அவர்கள் அசிங்கமாக பேசினார்கள் என்றும், அதற்கு ஜெயகணேஷ் யுவராஜை பார்த்து ஏன்டா இப்படி பேசுற என்று கேட்ட போது ஆறுமுகம் ஆச்சாரி வீட்டிற்கு முன்பு எங்களை வழிமடக்கி அசிங்கமாக பேசி கோகுல் என்பவர் சுதாகரை கையால் அடித்ததாகவும், யுவராஜ் அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்து காய் நறுக்கும் கத்தியை எடுத்து அஜித்குமாரை பார்த்து இதோடு ஒழிந்தடா நீ என்று சொல்லி அஜித்தின் கழுத்து, இடதுப்பக்க மார்பு, வயிறு, முதுகு, இரண்டு கால் முட்டிகள், வலது முழங்கை என பல இடங்களில் குத்தியும், கீறியும் ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும், அதை பார்த்த சுதாகர் அவனை சாவடிச்சிடாத டா என்று கத்திக்கொண்டு தடுக்க ஓடிய போது யுவராஜ் அதே கத்தியால் சுதாகரின் வலது கணுக்கால், இடது கால் தொடை ஆகிய இடங்களில் கத்தியால் கிழித்து காயம் ஏற்படுத்தியதாகவும், சத்தம் கேட்டு வந்த அண்ணாமலை தடுத்த போது அவருக்கு வலதுகை நடுவிரல் மற்றும் மோதிர விரலில் ரத்தக்காயம் ஏற்படுத்தியதாகவும், யுவராஜ் உடன் வந்த தாணேஷ் என்பவர் சுதாகரையும், ஜெய்கணேஷையும் பார்த்து அசிங்கமாக திட்டி எவனாவது வந்து கும்பலா உட்கார்ந்திகனா குளோஸ் பண்ணிடுவோம் என்று மிரட்டியதாகவும், தீனா (எ) தினகரன் என்பவர் சுதாகரை பார்த்து நீ என்ன பெரிய தாதாவா என்று சொல்லி சுதாகரின் முதுகில் அடித்ததாகவும், வினோத் மற்றும் பெருமாள் ஆகிய இருவரும் சண்டையை தடுத்ததாகவும், அஜித் குமாருக்கு ரத்தம் அதிகமாக வந்ததால் அவரை கார் மூலமாக ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், அண்ணாமலையும், அதே மருத்துவனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றும், சுதாகர் மட்டும் இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனையில் சிசிச்சைக்கு சேர்ந்து சிகிச்சை பெற்றார் என்று கூறியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் எங்கள் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.